# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு


பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண் 7/2014** **நாள் : 5/03/2014**

**பெறுநர்**
மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்

அன்பார்ந்த தோழரே,

வணக்கம்.

வெண்மணி தியாகிகள் நினைவாலய திறப்பு விழா நிகழ்ச்சி எதிர்வரும் 9.3.2014 அன்று நடைபெறுவதையொட்டி நம்முடைய தோழர்கள் வெண்மணிக்கு வருவதை உத்திரவாதப்படுத்த வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

வெண்மணி சம்மந்தமான தியாக நிகழ்ச்சியை நமது முன்னனி ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையில் மத்திய அமைப்பு சார்பாக 10,000 பிரசுரம் போடுவது என்ற அடிப்படையில் ரூ.10 வலையில் அச்சடிக்கப்பட்டு கிளைகளுக்கு இத்துடன் அனுப்பப்படுகிறது. அதை நம்முடைய தோழர்கள் ஊழியர்கள் மத்தியில் பரவலாக விநியோகம் செய்து அதற்குண்டான தொகையை மாநில மையத்திற்கு அனுப்பும்படி கேட்டு கொள்கிறோம். பிரசுரத்தின் விலை ரூ. 15 என்று குறிப்பிடப்பட்டாலும் ரூ.10 விலையில் ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லவும்.

மத்திய அமைப்பின் தொடர்முயற்சியால் களபிரிவில் பணியாற்றக் கூடிய 2008, 2009 ம் ஆண்டுகளில் மஸ்தூர்களாக பணியில் சேர்ந்த 4660 ஊழியர்களுக்கு கள உதவியாளர் பதவி உயர்வு வழங்குவதற்கான உத்திரவு B.P. 25/4/3/2014 பெறப்பட்டுள்ளது. சம்மந்தபட்ட கிளை செயலாளர்கள் உடனடியாக மேற்பார்வை பொறியாளர்களை சந்தித்து தேர்தல் தேதி அறிவித்த தேதிக்கு முன் தேதியிட்டு உத்தரவு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் 2013 ம் ஆண்டு சந்தாவை முடிப்பது, ஊதிய உயர்வு நன்கொடை விருப்ப படிவத்தை முழுமையாக ஊழியர்கள் மத்தியில் கொண்டு சென்று கையொப்பம் பெறுவது 2014 ம் ஆண்டிற்கான சந்தாவை ஊழியர்கள் மத்தியில் வசூல் செய்யும் பணியையும் இணைத்து செயல்படும் படி கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்